**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.**

**S.C.No.89/2018**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.3** |
| **Name** | **:** | **திரு.கார்த்திகேயன்.** |
| **Father's Name** | **:** | **வடிவேல்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**2,3 எதிரிகள் ஆஜர். 4ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1ம் எதிரி இறந்துவிட்டார்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.10.2023.**

**முதல் விசாரணை -**

**நான் வடகல்பாக்கம் கிராமத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். இறந்துபோன பிரேம்குமாரை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் 2006-ல் இருந்து 2012வரை நான் தலைவராக இருந்தேன்.**

**என் நிலத்திற்கு நான் தொகுப்பு வீடு குடியிருப்பு வழியாக சென்றேன். அப்போது ஒரு கொலை சம்பந்தமாக என்னை காவல் நிலையத்தினர் அழைத்தனர். ரோட்டில் இருந்து 10 அடி தொலைவில் தொகுப்பு வீட்டிற்கு**

அருகில் ஒரு பிரேதம் இருந்ததை எல்லோருடன் சேர்ந்து நானும் பார்த்தேன். தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை. காலை 10, 10.30 மணிக்கு பார்த்தேன்.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

2007ஆம் வருடம் நான் வடகல்பாக்கம் கிராம தலைவராக இருந்தேன் என்றால் சரி தான். 13.2.2007அன்று எங்கள் ஊரில் மயான கொல்லை நடந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அம்மன் ஊர்வலம் முடிந்து 5 மணிக்கு எங்கள் ஊரில் இருந்து சோதியம்பாக்கம் போகும் வழியில் ஒரு ஆண் பிரேதம் இருந்ததை தகவல் தெரிந்து நானும் ஊராட்சி மன்ற எழுத்தர் முருகனும் போய் பார்த்தோம் என்றாலும், அப்போது ஊர் மக்களும் பார்த்தார்கள் என்றாலும், அங்கு போய் பார்த்தபோது 25 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண் பிரேதம் இருந்தது என்றாலும், அந்த பிரேதம் கத்தியால் வெட்டப்பட்டிருந்ததை பார்த்ததாகவும், சிப்பந்தி மணி மற்றும் பன்னீர்செல்வத்திற்கு காவல் போட்டுவிட்டு நானும் முருகனும் தூசி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1.

நான் ஊர் தலைவர் என்ற முறையில் பிரேதம் இருந்த நிலையை குறித்து தெரிவித்து அது கொலையாக தான் இருக்கக்கூடும் என்று புகார் கொடுத்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இவ்வழக்கு சம்பந்தமாக தலைவர் என்ற முறையில் எந்தவொரு புகாரும் எழுத்துமூலமாக காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால் சரி தான். மறுநாள் காலை எங்கள் ஊராட்சி மன்ற உதவியாளர் தலைவர் என்ற முறையில் பிரேதத்திற்காக என்னிடம் ஒரு கையொப்பம் பெற்று சென்றார் என்றால் சரி தான்.

புகாரில் எழுதியுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரி தான். நான் இரண்டு நபர்களை பிரேதத்திற்கு காவலுக்கு போட்டுவிட்டு அன்று மாலை காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்து விசாரணைக்கு உடன் இருந்து பிரேதத்திற்காக சாட்சிகளை அழைத்து சென்று உதவியாக சொல்லியிருந்தால் தவறு என்றால் சரி தான். என்னிடம் இந்த வழக்கு சம்பந்தமாக எந்தவொரு வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரி தான். ஊராட்சி மன்ற தலைவர் என்பதால் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் மட்டும் தான் போட்டேன் என்றாலும் மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.